# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.251/2021**

| Deposition of Name | ஆசைத்தம்பி | Prosecution | LW-5 as PW7. |
|---|---|---|---|
| Father Name | அன்பழகன் | Defence | |
| Village | ஆத்துக்குடி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 48/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**14.10.2025.** **எதிரிகள் 1, 2, 3 ஆஜர். 4, 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜரில்லை குவிமுச 317 படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன்.

இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகளை தெரியும். பரிமளா, தேன்மொழி, வாசுகி ஆகியோர்களை எனக்கு தெரியும். அனைவரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 02.06.2021 ம் தேதி காலை 9.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது இந்த வழக்கு எதிரிகள் அசா.1 யை தகாத வார்த்தைகளால் திட்டியும், இரும்பு கம்பி மற்றும் கட்டைகளால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

அசா.1 எனது கணவர் ஆவார். இந்த வழக்கின் எதிரி எனது மகன் ஆவார். சம்பவ தினத்தன்று எனது வீட்டில் சண்டை நடந்த போது நான் வீட்டின் வெளியே வேலை செய்து கொண்டிருந்தேன். சத்தம் கேட்டு நான் உள்ளே சென்று பார்த்தபோது எனது கணவரும் மகனும் அடித்துக்கொண்டிருந்தார்கள். அதில் எனது கணவருக்கு இரண்டு கால்களிலும், தலையிலும் காயம் ஏற்பட்டது. அங்கிருந்து சிகிச்சைக்காக சீர்காழி GH க்கு அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**